ராணி
காமிக்ஸ்
சாட்டையடி வீரர் தோன்றும்,
சட்ட விரோதி!
ரூ
1·50

ரூ. 1,000 பரிசு: கட்டுரைப் போட்டி!

கடந்த ஆண்டு, கோடை விடுமுறையை முன்னிட்டு ஒரு கட்டுரை போட்டியை அறிவித்தது போல், இந்த ஆண்டும் கட்டுரை போட்டியை அறிவிக்கிறோம்.

தலைப்பு: "ராணி காமிக்ஸ்" இதழின் தலையாய தனிச் சிறப்பு

—1. பெரியவர்கள், இளைஞோர், குழந்தைகள் ஆகிய அனைவரும் வயது வரம்பு இல்லாமல் படிக்கக்கூடியது
—2. கதைகள் அனைத்தும், தீமைகளை எதிர்த்துப் போராடும் குணம், நாட்டுப்பற்று; வீரம் போன்ற நல்ல போதனைகளை வழங்குவது—
—3. சித்திரங்கள் மூலம் கதை சொல்லி கற்பனை வளத்தை வளர்ப்பதோடு; கால வரம்பு இல்லாமல் சேர்த்து வைத்து படிக்க வழி வகுப்பது—

—இந்த மூன்றில் ஏதாவது ஒன்றை வைத்து கட்டுரை எழுதி அனுப்புங்கள். கட்டுரைகள், ராணி காமிக்ஸ் அச்சிடும்போது 2-ல் இருந்து 3 பக்கங்களுக்குள் இருக்க வேண்டும். தேர்வுபெறும்

முதல் கட்டுரைக்கு பரிசு ரூ. 350/-
2-வது கட்டுரைக்கு பரிசு ரூ. 300/-
3-வது கட்டுரைக்கு பரிசு ரூ. 250/-

இவை தவிர, முதல் பரிசு பெறும் கட்டுரை தலைப்பில், 2 கட்டுரைகளுக்கு தலா ரூ. 50/- வீதம் ஆறுதல் பரிசும் உண்டு. ஆக மொத்தம் பரிசுத் தொகை ரூ. 1,000/-

கட்டுரைகள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி: **11-5-1987.**

வெற்றி பெற்றவர்கள் விவரம் 1-6-1987 இதழில் வெளிவரும். (முதல் மூன்று பரிசுகளைப் பெற்றவர்கள் மட்டும் உடனே பாஸ்-போர்ட் அளவு போட்டோ படம் அனுப்ப வேண்டும்.)

பரிசு பெற்ற 3 கட்டுரைகளும் 15-6-87 இதழில், அந்தப் படங்களுடன் வெளிவரும்.

போட்டியில் கலந்துகொள்ள வயது-வரம்பு கிடையாது. தேர்ந்தெடுக்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்ப இயலாது. போட்டியில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

கட்டுரைகளை அனுப்பவேண்டிய முகவரி:-

காமிக்ஸ் கட்டுரை போட்டி,
"ராணி காமிக்ஸ்",
1091, பெரியார் நெடுஞ்சாலை,
சென்னை-600 007.

ராணி காமிக்ஸ் — 67
(மாதம் இருமுறை இதழ்)

ஏப்ரல் 1—14,
1987

சட்ட விரோதி!

ஒரு நாள் பிற்பகல். ஒவ்வொரு இடமாகப் போய் சுற்றிப் பார்ப்பதில் ஆர்வம் கொண்ட ஒற்றைக்கண் சாட்டையடி வீரர் பிலிப், தன் நண்பர்கள் லியோ, சைமன், ஆகியோருடன் படுத்து இருந்தார்.

நண்பர்கள் இருவரும் தூங்கி விட, பிலிப் மட்டும் பகல் கனவு கண்டு கொண்டு இருந்தார்! அவர்கள் படுத்து இருந்த இடம், பேட்டர்சன் என்ற இடத்துக்குப் போகும் பாதையாகும். திடீர் என்று ஒரு சத்தம் கேட்டது.
ஏய் நில்! கையை மேலே தூக்கு!
அதைக் கேட்டு பிலிப் எழுந்து உட்கார்ந்தார். அவர் கை, சாட்டையை கைப்பற்றியது!

பிறகு பிலிப், எழுந்து போய் பார்த்தார். குதிரையில் போன ஒருவரை முகமூடி அணிந்த ஒருவன் மிரட்டினான்.
மிஸ்டர் மேயர்! சத்தம் போடாமல் பணப்-பையைக் கொடு! இல்லை...?
மேயர் பைக்குள் கையை விட்டு, பணப்பையை எடுக்கும் போது—
என் சாட்டையே! உனக்கு வேட்டை கிடைத்து-விட்டது!
முகமூடி ஆசாமியின் வலது கையை சாட்டை தர்க்கியது.
என்ன?


வழிப்பறி திருடனின் துப்பாக்கி கீழே விழ, அவன் பயந்து போய் ஓட்டம் பிடித்தான்!

உடனே மேயர், அவனை நோக்கி சுட்டார். ஆனால், குறி தவறி விட்டது.

துப்பாக்கி சத்தம் கேட்டு லியோ, சைமன் இருவருட
பிலிப்! என்ன விஷயம்?
லியோ! அவர் ஊழியருக்கு சம்பளம் பாங்கியில் இருந்து பண வந்த அவரை ஒருவன் வழ செய்ய முயன்றான். நான் தடுத்தேன்!
வழிப்பறி கொள்ளையன் ஓடியபின் மேயர், பிலிப்புக்கு நன்றி சொன்னார்.
உங்கள் உதவியால் பணம் தப்பியது.
அது எங்கள் கடமை, மேயர்!

மேயரின் குதிரை செய்தது மேயர் போராடினார்.
அவனைப் பிடிப்பது கடினம் அல்ல. சைமன்! அந்தக் குதிரையை பிடித்து அடக்கு. நானும், பிலிப்பும் திருடனைத்—தொடர்—கிறோம்!
அந்தத்— —திருடன் யார் என்று தெரியுமா?
சைமன் ஓடிச் சென்று குதிரை —யை அடக்கினான்.
உன் நண்பர்கள் அந்த திருடனை பிடித்து விடுவார்களா?
நாம் இனி அவர்கள் போன திசையில் போ—வோமா?
மேயர் கீழே இறங்கி திருடனி துப்பாக்கியை எடுத்தார்.
அந்த திருடனிடம், ஒருவேட்டை துப்பாக்கியும் இருக்கு! ஜாக்கிர— —தையாக போக வேண்டும்!

திருடனைத் தேடி காட்டுக்குள் பிலிப்பும், லியோவும் முதலில் போனார்கள்.
லியோ! அதோ அந்த புதர் வழியே அந்தத் திருடன் மறைந்து முயல் போல் நழுவி விட்டான்.

திருடனைப் பிடிக்கும் வேலை தொடங்கியது.
இந்த பேட்டர்சன் பகுதி உங்களுக்கு புதிது இல்லையா? இந்தப் பகுதி மேயர் நான்தான். பெரும்பான்மையான மக்கள் சட்டத்துக்கு கட்டுப்பட்டவர்கள். ஒரு சிலர் கெட்டவர்களாக உள்ளனர்.

மேயர், தன் மக்களைப் பற்றி இழிவாகப் பேசினார்.
இந்தப் பகுதி மக்களுக்கு வரி கொடுப்பது என்றால் வெறுப்பாக உள்ளது. அரசுடன் வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளவும் மறுக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நிலங்களை பட்டா செய்து கொடுத்து ஒரு பயனும் இல்லை!

காட்டுக்குள் நுழைந்து போன பிறகு சமவெளி வநதது. அதன் பிறகு பாறை நிறைந்த பகுதி.
அவன் அந்த குன்றுக்கு. போய் இருக்கிறான்!
அங்கே போய்— —பார்ப்— —போம்


குன்று பகுதிக்கு வந்ததும், தரையில் குதிரை குழம்பு தடம் தெரி -கிறதா என்று பார்த்தார்கள் தடம் தெரியவில்லை.
அவன் இங்கே திரும்பி போய் இருக்க வேண்டும்!
அதை எப்படி உறுதியா சொல்கிறாய்?
சைமன் சொல்வது சரிதான்!

ஒரு மணி நேர பயணத்துக்குப் பின் குன்றை கடந்தனர்.
குதிரைத் – –தடம் அந்த வீட்டை நோக்கிச் – –செல்கிறது!
அது வழிப்பறி திருடன் வந்த குதிரை!
இந்த இடத்தை ராலி என்பவனுக்கு குறைந்த விலைக்கு பட்டா செய்து கொடுத்தேன். அதற்கு அவன் காட்டிய நன்றியை பார்த்தீர்களா?
அந்த வீட்டை நோக்கி சைமன் புறப்பட போகையில் மேயர் தடுத்தார்.
மேயர்! உங்களிடம் திருட முயன்றவனை பிடிக்க வேண்டாமா?
வேண்டாம். இந்த ராலியை எப்படி எங்கே பிடிக்க வேண்டும் என்று தெரியும். நான் பார்த்துக் கொள்கிறேன்

திடீர் என்று மேயர் பின்வாங்கியதைப் பார்த்து நண்பர்கள் ஆச்சரியம் அடைந்தனர்.
ராலி, சட்ட விரோதி அல்ல. கொஞ்சம் முட்டாள்தனமா நடந்து கொண்டான். நாளை நான் நடவடிக்கை எடுப்பேன்.
சரி மேயர்! அது உங்கள் இஷ்டம்.


பிறகு அவர்கள் பேட்டர்சன் நகர் போகும் பாதைக்கு திரும்பி, மாலையில் பேட்டர்சன் வந்து சேர்ந்தனர்
மேயர்! வாருங்கள்! பயணம் எப்படி இருந்தது?
ஷெரீப்! சந்தோஷமா இல்லை. வழியில் ஒரு திருடன் என்னை மடக்கினான் இவர்கள் மூவரும் இல்லாவிட்டால், பணம் பறி போய் இருக்கும்!

அதைக்கேட்டு காவல் தலைவர் ஷெரீப் அதிர்ச்சி அடைந்தார்.
அந்த ஆசாமி யார்? இப்போதே பிடித்து வருகிறேன்.
வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்!
மேயர் அப்படிச் சொன்னதும் ஷெரீப் —
நீங்க சொல்றபடி செய்கிறேன், மேயர்!
மேயர் சொன்னால் ஷெரீப், தோப்புக் கரணம் போட்டு விடுவார் போல் இருக்கு!
பிறகு நண்பர்கள் மூவரையும் மேயர் ஒரு ஓட்டலுக்கு அழைத்து வந்தார்.
பேட்டர்சனில் இதைவிட நல்ல ஓட்டல் கிடைக்காது.
சரி மேயர்! நாங்கள் இங்கேயே தங்குகிறோம்.
ஓட்டல்


நண்பர்கள் அந்த ஓட்டல் முன் குதிரைகளைக் கட்டியபோது, முரட்டு மிடுக்கும் திருட்டுப் பார்வையும் கொண்ட 5, 6 பேர் ஓட்டலில் இருந்து வெளியே வந்து பார்த்தனர்.
ஏய் கார்ல்! குட் ஈவினிங்! எப்படி இருக்கிறாய்?
இவர்கள் எல்லாம் உங்க நண்பர்-களா?

பிலிப், லியோ, சைமன் மூவரையும் கார்ல் மற்றும் அவன் நண்பர்களுக்கு மேயர் அறிமுகம் செய்து வைத்தார். கார்லின் ஆட்கள் பார்வை சரி இல்லாததை சாட்டையடி வீரரும் அவர் நண்பர்களும் நொடியில் புரிந்து கொண்டனர்!
கார்லும், அவன் நண்பர்களும் எனக்கு உதவி செய்வார்கள்.
ஆமா! நாங்க இல்லாவிட்டால், மேயர் இங்கே கவுரவமா இருக்க முடியாது!

கீழே அந்த வீட்டில் என்ன நடக்கிறது என்று பார்க்க, சாட்டையடி வீரர் பிலிப் நண்பர்களுடன் போனார். அப்போது அந்த வீட்டின் முன்–
என்னை தடுக்க வேண்டாம். அவர்களை விடமாட்டேன்.
அகதா! ஆத்திரப்–படாதே! ஆபத்தை விலைக்கு வாங்கக்–கூடாது.
அகதா என்ற அந்தப் பெண், வீட்டுக்குள் போய் துப்பாக்கியை எடுத்து வந்து–
ஏய்! அவள் நம்மை குறி வைக்கிறாள்!

அவள் கணவன் தடுக்க, குண்டு வானத்தில் பறந்தது.
அகதா வேண்டாம்!
என்னை விடுங்க!
தன் கணவரை கீழே தள்ளி விட்டு அகதா மீண்டும் சுட்டாள். குதிரையில் இருந்து இறங்கிய மூவரும் தரையில் படுத்து தப்பினர்.
வேட்டுச் சத்தம் அந்த பள்ளத்தாக்கில் எதிரொலிக்க, நண்பர்கள் மூவரும் எழுந்து கொண்டனர்.
என் மனைவி மீது கை வைக்காதே!
நீர் என்ன சொல்கிறீர்?

அகதா என்ற அந்த கிழட்டுப் பெண், அவளது கணவர், இருவரின் கண்களில் காணப்பட்ட பீதி, உடலில் ஏற்பட்ட நடுக்கம் நண்பர்களை இரக்கம் கொள்ளச் செய்தது.
பெரியவரே! ஏங்களைச் சுட காரணம் என்ன? நாங்கள் வழிப்போக்கர்கள். தீங்கு இழைக்க மாட்டோம்.
நீங்கள் "அவர்களோ" என்று நினைத்தோம்!

அதைக் கேட்டு மூவரும் குழம்பினர்.
அவர்களா? யார் அவர்கள்?

அதற்கு பதில் சொல்லும் முன், அகதாவை வீட்டுக்குள் தள்ளினார், அவள் கணவர்.
இவள் ஏதோ உளறி விட்டாள். அதை நீங்க பெரிசுபடுத்த வேண்டாம்!
பெரியவரே! நில்லும்! விவரம் சொல்லும்!
ஆனால் அந்தக் கிழவர், மனைவியுடன் அவசரமாக வீட்டுக்குள் போய் கதவை பூட்டிக் கொண்டார்.
இந்த தம்பதிகள் ஏன் இப்படி பயந்து சாகிறார்கள்?
நம்மைப் பற்றி இவர்களுக்கு தெரியாது. நாம் புறப்படு—வோம்.

பிறகு அவர்கள் தென் திசையில் பயணம் மேற்கொண்டனர். கொஞ்ச தூரம் போனதும் இன்னோர் வீடு தென்பட்டது.

அவர்கள் அந்த வீட்டின் பின்புறமாக போனார்கள். வீட்டை நெருங்கியதும் ஒரு சத்தம் அவர்களை உலுக்கியது.


மூவரும் குதிரைகளை விட்டு விட்டு வீட்டை நெருங்கினர். இப்போது எல்லாம் புரிந்தது!
கார்ல்! இது இவனுக்கு ஒரு பாடம்.
இந்தப் பாடத்தை இவன் மறக்கக் கூடாது. இனியும் திருந்தாவிட்டால், தர்ம 'அடி, மரண அடியாக மாறும்!

கைத்துப்பாக்கியால் கார்ல் அடிக்க, ராலி மயங்கி விழுந்தான்.
டேய்! இவனைத் தூக்கி வீட்டுக்குள் வீசுங்கடா!

அவனைத் தூக்க முரடர்கள் வந்தபோது லியோவின் குரல் கம்பீ-ரமாக ஒலித்தது.
ஏய்! நில் அப்ப-டியே!
திடுக்கிட்டு நின்ற கார்ல், அவன் ஆட்கள் லியோ அருகே வந்து—
கார்ல்! ஏன் இப்படி அடித்து-உதைத்தாய்?
இவன் நேற்று மேயரை வழிப்பறி செய்ய மிரட்டி இருக்கிறான். அடித்து பாடம் புகட்டி உள்ளேன்!

கார்ல்லும் அவன் ஆட்களும் தனக்கு உதவியாக இருப்பதாக மேயர் கூறியதன் அர்த்தம் இப்-போது மூவருக்கும் விளங்கியது.
இது தண்டிக்கும் முறை இல்லை!
மேயர் கடைபிடிக்கும் முறை இதுதான்
பிறகு கார்ல் தன் ஆட்களிடம் —
உம்! ராலியை- தூக்கி- -உள்ளே போடுங்க!
யாரும் தொடக்கூடாது. அவனுக்கு நீதி கேட்க உரிமை இருக்கு!
அதைக்கேட்டு கார்ல் ஆத்திரம் அடைந்து—
நீ யார் அதைச் சொல்ல? தேவை இல்லாமல் தலையிட்டால் என்ன நடக்கும் என்பதை உனக்கு- காட்டுகிறேன்!

கார்ல், துப்பாக்கியால் லியோ—வைத் தாக்க முனைந்தான். அதற்—குள் லியோ மின்னல் வேகத்தில் முந்திக் கொண்டார்.
ஐயோ!
வலி தாங்காமல் கார்ல், ஸ்தம்—பித்து நிற்க, அவனது ஆட்கள் மோத வந்தனர்.
தன்னைத் தாக்க வந்த ஒருவனை தாடையில் லியோ குத்தினார்.
லியோ! என்னிடம் விடு.

மிருக பலம் கொண்ட, ஒற்றைக்கண் சாட்டையடி வீரர் இரண்டு ரவுடிகளை கழுத்தை பிடித்து முட்ட வைத்தார்.

ரவுடிகளை மூன்று வீரர்களும் ஒரே நிமிடத்தில் துவைத்து எடுத்தார்கள். கார்ல் துப்பாக்கியை எடுத்தான் —
டேய் நகருங்கடா! இவர்களை சுட்டுத் — தள்ளுகிறேன்!

அதைக் கேட்டு சுதாரித்த சைமன்
ஐயோ!
கார்ல் கையில் தோட்டா தைத்தது. துப்பாக்கி கீழே விழுந்தது. அவன் திகைத்து நின்றான்.
பிலிப், இடுப்பில் சுற்றி இருந்த சாட்டையை எடுத்து ஒவ்வொருவனுக்கும் விருந்து கொடுத்தார்!
திரும்பிப் பார்க்காமல் ஓடுங்க.

கார்லும், மற்ற முரடர்களும் குதிரையில் ஏறி புறப்பட்டனர்.

குதிரையில் ஏற முடியாத ரவுடிகளை பிலிப்பும், சைமனும் ஏற்றி விட்டனர்.

பேச்சை நிறுத்து. சட்ட விரோதிகளுக்கு நீதி விசாரணை மூலமே தண்டனை வழங்க வேண்டும். உனக்கு அது மறுக்கப்பட்டதால் நாங்க குறுக்கிட்டோம். உன்னைப் —பற்றி மேயரிடமும், ஷெரீப் —பிடமும் பேசப் போகிறோம்!
லியோவுக்கு உண்மையை விளக்க விரும்பிய ராலி கூறினான்—
உங்களுக்கு அவர்களை பற்றி தெரியாது. அந்த சர்வாதி-காரிகள் என்னிடம் எடுத்த பணத் —தைதான் நான் நேற்று பறிக்க முனைந்தேன்.
இங்கே குடி இருக்கும் நாங்கள், இந்த நிலங்களை தவ்ணை முறையில் வாங்கினோம். அதற்கு வட்டியும் கட்டுகி-றோம். திடீர் என்று தவணைத் தொகையை 2 மடங்கு, 3 மடங்காக உயர்த்தி விட்டார்.

அதிர்ச்சி அடைந்த லியோ—
அதை கொடுக்காததால் தாக்கினாரா?
அடி ஆட்களை வைத்து அடித்து விளை பொருட்களை எடுத்து செல்கிறார்.
ஷெரீப் உதவியால் ரவுடிகளை வைத்து மேயர் அக்கிரமம் செய்வதை மூவரும் அறிந்தனர்.
என் வீட்டுக்குள் பொருட்களை அடித்து நொறுக்கி இருப்பதை பாருங்க. பக்கத்து வீட்டில் இருக்கும் அகதா, அமோஸ் இருவருக்கும் எனக்கு ஏற்பட்ட கதிதான்!
தங்களையும் மேயரின் அடி ஆட்கள் என்று நினைத்தே அந்த அகதா, துப்பாக்கியால் சுட்டதை மூவரும் புரிந்து கொண்டனர்.
நான் நேற்று மேயரை மடக்கிய போது, என்னை அடையாளம் தெரியாமல் இருக்கத்தான் முகத்தை மூடி இருந்தேன்.
நீயும் மற்றவர்களும் மேயருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாமே!

அடியாட்களை வைத்து எங்களிடம் எவ்வளவு பணத்தை கறக்க முடியுமோ அந்த மேயர் கறக்கிறார். கார்லும், அவன் ஆட்களும் தான் முக்கியமான கைக்கூலிகள்.
மேயரின் அடாவடி நடவடிக்கைக்கு ஷெரீப் உடந்தை! இல்லையா?
கீழே விழுந்துகிடந்த ஒரு பேர்ட்-டோவை லியோ எடுத்தார். அதில் 2 சிறுவர்கள் இருந்தனர்.
இது உன் மகன்களா?
இல்லை. அது நானும் என் தம்பி பில்லும். சிறிய வயதில் விதியின் விளையாட்டால் பிரிந்து விட்டோம்.
அந்த போட்டோவை நண்பர்கள் மூவரும் பார்த்தனர்.
சைமன்! பிலிப்! இந்த மேயரின் அக்கிரமங்களுக்கு ஒரு முடிவு கட்டுவதுதான் அடுத்த வேலை!

அதற்கு இருவரும் சம்மதித்தார்கள்.
ராலி! நீ சொன்னது உண்மை என்று நம்புகிறோம். அதுபற்றி நாங்கள் கவனிக்கிறோம். நீ மேயரிடம் எந்தத் தகராறும் செய்யாதே!
பிறகு பிலிப், லியோ, சைமன் மூவரும் போய் விட்டனர். ராலி தன் வீட்டை சரிப்படுத்தினான். அப்போது அங்கே ஒருவன் வந்து
பக்கத்தில் ஏதாவது நகரம் இருக்கா!
அருகில் பேட்டர்சன் நகரம் இருக்கு. வட பக்கம் போனால் மெயின் ரோடு வரும். அதன் வழியா போ.

குதிரையில் வந்த ஆளை, ராலி நன்றாக பார்த்தான். அவன் கண்-களில் ஏதோ உணர்வு தெரிந்தது.
அந்த புதிய ஆள் குதிரையில் இருந்த தோரணை, துப்பாக்கி அருகே கையை வைத்திருந்த ஸ்டைல் எல்லாம் ராலி மனதில் பதிந்தது!
குதிரையில் வந்த ஆளின் பெயர் டென்வர். எப்போதும் எங்கும் தனியாகவே போகக்கூடியவன்.
இந்த ஆள் யார்? இவனைப் பார்த்ததும் உள்ளத்தில் ஏதோ உணர்வு ஊற்று எடுக்குது!

டென்வர் தொடர்ந்து பயணம் செய்தான். வெயில் கடுமையாக இருந்தது.
இந்த நிழலில் கொஞ்சம் ஓய்வு எடுத்து விட்டு, பிறகு போகலாம்!
அங்கே இருந்த குட்டைக்கு வந்து குடிப்பதற்கு தொப்பியில் தண்—ணீர் எடுத்தான். பிறகு—
சே! மண் எண்ணை வீச்சம்! இதை குடிப்பதை-விட விக்கல் எடுத்து சாகலாம்!
பிறகு அவன் பேட்டர்சன் நகரை போய் அடைந்தான்.
யார் இந்த 3 பேர்? என்போல் பயணிகளா?

பிலிப், லியோ, சைமன் மூவரும், இதற்கு முன் தங்கிய அதே ஓட்டலில் அறை எடுத்தனர். அப்போது மேயர் அவர் ஆட்கள் கார்லும், மற்றவர்களும் அங்கே இருந்தனர். மேயர் லியோவிடம் –
லியோ இங்கேவா. இவர்களை அடித்ததாக உங்கள் மூவர் மீது வழக்கு பதிவு செய்ய என்னிடம் முகாந்திரம் இருக்கு!
நாங்களே உங்களை சந்திக்க நினைத்தோம்!

பிறகு லியோ மேயரை நெருங்கிப் போய்–
இந்தப் பகுதியில் என்ன நடக்கிறது என்று நாங்க நன்றாக தெரிந்து கொண்டோம். இங்கே அனைவருக்கும் சரியான நீதி கிடைக்க-வேண்டும். மேயர்! உம்மை எச்சரிக்கி-றோம்!

அதைக் கேட்டு ஆத்திரம் அடைந்த காவல் தலைவர் ஷெரீப் –
ஏய் லியோ! இங்கு ஏதாவது வம்பு செய்தால் ஜெயிலில்– தள்ளுவேன்!
ஷெரீப் உம்மையும் எச்சரிக்கிறேன். உம் நெஞ்சில் தொங்கும் நட்சத்திர சின்னம் நேர்மையின் சின்னம். சட்டத்தை உம் கால் அடியில் போட்டு துவைத்தால் நீர் பதவியில் இருக்க முடியாது.
உடனே, ஷெரீப்பை கூட்டிக் கொண்டு மேயர் புறப்பட்டார்.
டாட்டா!

நண்பர்கள் மூவரும் அறைக்குச் சென்றதும் மேயரிடம் ஷெரீப் -
மேயர்! அந்த மூன்று பேர் போக்கு சரி இல்லை. வம்பு செய்ய வந்து இருக்காங்க!
ஆமா! அவர்களால் கடுமையான நிலை ஏற்பட்டு இருக்கு. அவர்களை சமாளிக்க தயார் ஆகணும். இதற்கு இடையில் என் மனதில் வேறு ஒரு முக்கிய திட்டம் இருக்கு!

பிறகு மேயர் தன் அடியாட்களுடன் பேசினார் -
இந்த பேட்டர்சன் பகுதி பற்றி எனக்கு ஒரு செய்தி கிடைத்து இருக்கு! இங்கே பூமிக்குள் முக்கிய பொருள் இருப்பதா தகவல் கிடைத்து. அதுபற்றி சோதனை செய்ய நிபுணர்கள் வர இருக்கிறார்கள்.
பூமிக்குள் தங்கமா?


மெதுவா பேசு. விஷயம் வெளியே பரக்கக்கூடாது. தங்கம் இல்லை. அதைவிட லாபம் தரக்கூடிய வஸ்து!
அப்போது அங்கே ஒருவன் நுழைந்தான். அவன், ராலியிடம் பேட்டர்சன் நகருக்கு வழி கேட்டுக் கொண்டான்.
குடிக்க குளிரா ஏதாவது கொடு. ஒரே தாகம்!

ரொம்ப தூரத்தில் இருந்து
ஆமா. வழியில் ஒரு குட்டையில் தண்ணீர் குடித்தேன்.
டென்வர் கூறியது. மேயர் காதில் விழுந்தது.
அந்த ஆள் கூறியதை கேட்டாயா?
அந்த ஆளைப் பற்றி அறிந்து கொள்ள மேயர் ஆவல் கொண்டார். ஆனால் அதற்குள் புதிய ஆள், அங்கு இருந்து போய் விட்டார்.
நாம் அந்த ஆளை பின் தொடர்வோம்!
மேயர்! நீங்களும் உங்க ஆட்களும் இதில் ஈடுபடுங்க. நான் வரமாட்டேன்!


ஷெரீப்பை முறைத்து பார்த்துவிட்டு, மேயர் டென்வரை பின்தொடர்ந்தார்.
மிஸ்டர் ஒரு நிமிடம் உன்னுடன் பேச வேண்டும். நீ குறிப்பிட்ட அந்த தண்ணீர் குட்டை எங்கே இருக்கிறது?
STORES


அதைக்கேட்ட மேயர், தன் ஆட்களுக்கு சமிக்ஞை காட்டினார். அவர்கள் துப்பாக்கியில் கைவைத்தனர்.
என் பேச்சுக்கு இவன் சரியா மதிப்பு கொடுக்கவில்லை. இவனை கொஞ்சம் கவனித்தால் சரியா பேசுவான்!


அதைக் கேட்டு சுதாரித்த டென்வர், தன் துப்பாக்கியை எடுத்து –
மிஸ்டர்! உமது காவல் நாய்களை சும்மா இருக்கச் சொல்லும். இல்லை இது வெடிக்கும்!
கார்ல், ஜோ, பிளாக்கி! யாரும் எதுவும் செய்யாதீர்கள்!


பயத்தில் மேயர் நடுநடுங்கியதைப் பார்த்த டென்வர்
உம்... நான் சொன்னபடி நடந்து கொண்டீர். அதனால் பிழைத்தீர் இனிமேல் யாருடனாவது மோதுவது என்றால் அவர் யார், பெயர் என்ன என்று தெரிந்துகொண்டு பிறகு மோதும். என் பெயர் டென்வர்!
டென்வரா?!

டென்வர் என்றால் மின்னல் வேகத்தில் சுடக்கூடிய ஆள் என்பது மேயருக்கும் மற்றவர்களுக்கும் தெரியும்.
சாரி மிஸ்டர் டென்வர்! அந்த தண்ணீர் குட்டை பற்றி சொன்னால் நான் பணம் தருகிறேன்.
200 டாலர் தருவீரா?
பணத்தை வாங்கிக் கொண்டு, இடத்தை டென்வர் கூறினான்.
அது ராலி இடம் அல்லவா?
ராலி வட்டி கட்ட வில்லை. எனவே நிலத்தை திருப்பி என் பெயரில் ரிஜிஸ்தர் செய்து விடுகிறேன்.
குதிரையை லாயத்தில் கட்டிவிட்டு மீண்டும் வந்து அறை எடுத்தான். அப்போது, பிலிப், சைமன் மூவரையும் பார்த்தான்.
உங்களை எங்கோ பார்த்த நினைவு இருக்கு!
இருக்கலாம். நாங்க ஊர், ஊரா சுற்றுபவர்கள்!

பிறகு டென்வர் அங்கு இருந்து போய் விட்டான்.
இந்த ஆளை எனக்கு இப்போ நினைவு வருது! லா ஜந்தா என்ற ஊரில் சந்தித்தோம். பெயர் டென்வர்
டென்வர்! துப்பாக்கியை தூக்குவதைத் தொழிலாகக் கொண்டவன் ஆச்சே!
நமக்கு எதிரா தூக்க மாட்டான்!
டென்வரும் சில நாள் அந்த ஓட்டலில் தங்கி இருந்தான். ஒரு தடவை அவன் மேயருடன் பேசுவதை நண்பர்கள் மூவரும் கவனித்தனர்.
டென்வர்! உன்னுடன் கொஞ்சம் பேச வேண்டும்!
என் போன்ற துப்பாக்கி வீரனுடன் மேயருக்கு என்ன வேலை?
REAL ESTATE
OFFICE

பிறகு டென்வரை, மேயர் தனது அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றார்.
டென்வர்! ஒரு ஆளை தீர்த்துக் கட்ட வேண்டும். அதற்கு உன்னை பயன்படுத்த விரும்புகிறேன். என்னிடம் ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் இதில், உன் போன்ற புதிய ஆளை ஈடுபடுத்துவது நல்லது.
புதிய ஆள் எதற்கு? இங்கே உள்ள ஷெரீப்தான் நீங்க சொல்றபடி குட்டிக்கர்ணம் அடிப்பாறாமே!
டென்வர்! வர வர அந்த ஷெரீப் பயப்படுகிறார். அதனால் காரியத்தை நீ முடி உனக்கு 2 ஆயிரம் டாலர் தருகிறேன்.
முதலில் 500 டாலர் அட்வான்ஸ் வேண்டும்.
இதோ அட்வான்ஸ். அந்த ஆளை நான் ஏன் தீர்த்துக் கட்ட விரும்புகிறேன் என்றால்...
அது எனக்கு தேவை இல்லை. அவனைக் காட்டுங்க. தீர்த்து விடு-கிறேன்.

டென்வர் கம்பீரமாக அமர்ந்தான்.
டென்வர்! அந்த ஆள் வாரம் ஒரு நாள், வெள்ளிக்கிழமை தோறும் மத்தியானம் சந்தைக்கு போவான். அப்படி போகும் போது அவனைக் காட்டுகிறேன். அவன் வீட்டையும் காட்டுகிறேன். தீர்த்து விடு!
தனது பழக்கத்தை டென்வர் கூறினான்—
மேயர்! நான் ஒருவனை சுட்டுக் கொல்வதற்கு முன் அவனிடம் அதுபற்றிச் சொல்வேன். உடனே அவன் சுதாரித்து தற்காத்துக் கொள்ள வேண்டும். அவன் முதலில் துப்பாக்கியை தூக்காவிட்டால் நான் முந்திக்— —கொள்வேன்.
நீ துப்- -பாக்கியை எடுக்கும் வேகத்தை ஒருவனாலும் ஈடுகொடுக்க முடியாது!

வெள்ளிக்கிழமை, பிற்பகல். ராலி சந்தைக்குப் போய்விட்டு வீடு திரும்பினான். அவனை மேயர், டென்வரிடம் காட்டினார்.
டென்வர்! அதோ அவன்தான். பெயர் ராலி. நீ, ஒரு குட்டை பற்றி சொன்னாயே, அதன் அருகே தனி வீட்டில் வசிக்கிறான்.
எனக்கு அந்த இடம் தெரியும்.
சந்தேகப்படும் வகையில், ராலியைக் காட்டி டென்வருடன் மேயர் பேசியதை பார்த்த சைமன் ஓட்டலுக்குள் ஓடினார்.
இதுபற்றி உடனடியா லியோவிடம் சொல்லணும்!

லியோ பத்திரிகை படித்துக்கொண்டு இருந்தார்.
லியோ!
என்ன சைமன்! பரபரப்பாய் காணப்படுகிறாய்?
மேயரும், டென்வரும் பேசியதை லியோவிடம் சைமன் கூறினார்.
ராலியை சுட்டுக்- கொல்ல டென்வரை மேயர் அமர்த்தக் காரணம் என்ன?
அந்த நேரத்தில். டென்வர் அங்கே வந்து ஓட்டல் குமாஸ்தாவிடம் பேசினான்.
அந்த கடிதம் எனக்கு வந்தது!
சாரி மிஸ்டர் டென்வர்! அது தவறாக இங்கே டெலிவரி செய்யப்பட்டு- -விட்டது.

டென்வர் மீண்டும் கடிதத்தை கேட்டான்.
டென்வர்என்பது எனது ஊரின் பெயர். அந்த கடிதம் எனக்குவந்ததுதான். என்னிடம் கொடு!
உறுதியா சொல்கிறீர்களா?
கடிதத்தை வாங்கிக் கொண்டு டென்வர் போவதை சைமனும், லியோவும் பார்த்தனர்.
சைமன்! டென்வர் ராலியைத்தேடிப்போகலாம். நான் அவனைபின் தொடருகிறேன்.
டென்வர், குதிரை லாயத்தை நோக்கி நடந்தான். லியோ பின் தொடர்ந்தார்.
கூலிக்கு கொலை செய்யும் இவன் ராலியை தேடித்தான் போகிறான்!

டென்வரை பின் தொடர்ந்து, லியோ சென்றார். இருவரும் பேட்டர்சன் நகருக்கு வெளியே வந்தனர்.
டென்வர், ராலியை தேடிப் போவது உறுதி ஆகிவிட்டது. நான் இன்னும் வேகமா போகணும்!
ராலியின் வீட்டை டென்வர் அடைந்தான். டென்வரும் ராலியும் நேருக்கு நேர் சந்திக்க, டென்வர் தான் வந்து இருக்கும் நோக்கத்தை சொல்லும்போது லியோ—
ராலி! ராலி!

குரல் வந்த திசையில் ராலியும், டென்வரும் நோக்கினர். குதிரையில் வந்து கொண்டு இருக்கும் லியோ முகத்தில் கோபம் கொப்பளிப்பதை அறிந்த டென்வர் துப்பாக்கியை எடுத்தான்.
ஆனால் அதற்குள் லியோவின் துப்பாக்கி உறுமியது. டென்வர் கையை ரவை ருசித்தது.
வாழ்க்கையில் முதல் தடவையாக டென்வர் தோற்றான். லியோ முந்திக் கொண்டார்.
இவன், என்னை சண்டைக்கு அழைத்தான். மேயர் இவனை அனுப்பி இருக்கலாம்!
உன் ஊகம் சரியானது, ராலி. ஆனால் இன்னோர் விஷயம் இருக்கு!

ஆவலுடன் நோக்கிய ராலியிடம், லியோ கூறினார் —
கொலோராடோ பகுதியில் டென்வர் என்ற ஊரில் தானே நீ வளர்ந்தாய்? அப்படி என்றால் இவன் உன் தம்பி. உன் முழுப்பெயர் ராலி கார்லாண்ட். இவன் பெயர் பில் கார்லாண்ட். தன்னை டென்வர் என்றே சொல்லிக் கொண்ட, இவனுக்கு, இன்று ஓட்டலுக்கு ஒரு கடிதம் வந்தது. அதை வைத்து அனுமானித்தேன்.
நீங்க என்ன சொல்றீங்க?


பிறகு அவர்கள் இருவரும் ஒருவரைப் பற்றி ஒருவர் விசாரித்த பின், அண்ணன்-தம்பி என்பதை உறுதி செய்து கொண்டனர்!
அண்ணா! உண்மை தெரியாமல் உன்னை கொல்ல இருந்தேன்!
அறியாமல் செய்த அந்த தவறை நான் மறந்துவிட்டேன், நீ இனி உன் வாழ்வை சீர் செய்து கொள்.


அப்போது அங்கே பிலிப், சைமன் இருவரும் வந்து சேர்ந்தனர். நன் செய்கையை நினைத்து வெட்கம் அடைந்த டென்வர் அங்கு இருந்து புறப்பட்டான்.
டென்வர் நில்! உன்னிடம் உள்ள துப்பாக்கிகளை என்னிடம் கொடுத்துவிடு!

லியோ கூறியபடி ஆயுதங்களை ஒப்படைக்க டென்வருக்கு சம்மதம்தான். ஆனால்...
லியோ சார்! என் அண்ணனை தீர்த்து கட்ட மேயர் முடிவு செய்துவிட்டார். இந்த நிலையில் நான் என் அண்ணனுக்கு பாதுகாப்பா இருப்பது அவசியம்!
உன் அண்ணனுக்கு உன் உதவிதேவை இல்லை. அவனை நானும் என் நண்பர்களும் காப்பாற்று--வோம்!

பிறகு டென்வர், மேயர் ஆபீசுக்குச் சென்றான். அங்கே மேயருடன் கார்ல்லும் இருந்தான்.
டென்வர் உன் கையில் என்ன?
அதைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்கவே வந்தேன். நீர் கொல்லச்--சொன்ன ஆள் என் அண்ணன்
அதைக் கேட்டு மேயர் அதிர்ச்சி அடைந்தார். பிறகு—
ராலி உன் அண்ணனா!? அவன் முதலில் துப்பாக்கியை எடுத்து சுட்டானா? நல்ல கதை!
மேயர் சந்தேகப்--படுவது சரிதான் ஆனால் என்ன நடந்தது என்று இவரிடம் ஏன் சொல்ல வேண்டும்?

கார்ல் மற்றும் அடியாட்களுடன் ராலியை தேடிப் போனார்.



மேயர் உத்தரவுப்படி, அவர்கள் 2 பிரிவாக பிரிந்து வீட்டை நெருங்கினர்.
இந்த மணல் மேடுக்கு பின்னால் மறைந்து சுடுவோம். நம்மை, அவன் சுட இடம் கொடுத்துவிடக்கூடாது!
அடுத்த நிமிடம் மணல் மேட்டின் பின்புறம் படுத்தபடி, ராலி வீட்டை குறி வைத்தனர். பிறகு கார்ல் உரத்தகுரலில்—
டேய் ராலி! மரியாதையா வெளியேவா! நாங்க சொல்ற படி நடந்தா நீ தப்பலாம்!

அடுத்த வினாடி ஜன்னலில் ஒரு தலை தெரிந்தது. பிறகு பல தலைகள் தெரிந்தன!
அந்த ராலி பயலுக்கு துணையா லியோவும் அவன் நண்பர்களும் உள்ளனர்.


அடுத்த வினாடி, கார்ல் சுட்ட குண்டு ராலி வீட்டு கதவு கண்ணாடியை உடைத்தது.
பிலிப்! சைமன்! வீட்டின் பின்புறம்போங்க. அங்கேயும் அவங்க இருக்காங்க!

அடுத்து சாம், பிளாக்கி இருவரும் சுட்ட குண்டுகள் கண்ணாடியைத் துளைத்தன! அதன்பின் லியோவும் நண்பர்களும் சுட ஆரம்பித்தனர்.
குறி பார்த்து மின்னல் வேகத்தில் சுட வல்லவர்களான லியோவும் நண்பர்களும் சுட்ட குண்டு பாய்ந்து முதலில் பிளாக்கி சாய்ந்தான்.
பிறகு சாம் சுருண்டான்.
ஆ! ஐயோ!

அதைப்பார்த்து குலை நடுங்கிய, கார்ல் குதிரையில் ஏறி தப்ப நினைத்தான். அதற்காககுண்டு தீரும்வரைசரமாரியாக சுட்டான்.


சுட்டபடியே அவன் தப்ப நினைப்பதை புரிந்துகொண்ட லியோ, அவன் தலைக்கு குறிவைத்தார். தப்பவில்லை. கார்ல் தலை சாய்ந்தான்.

பிறகு லியோவும், ராலியும் வீட்டின் பின்புறம் சென்றார்கள். அங்கே மேயரும் மற்றவர்களும் சுட ஆயத்தம்செய்து கொண்டு இருந்தனர்.
ராலியை உயிரோடோ, பிணமாகவோ பிடியுங்கள்!

அப்போது திடீர் என்று ஒரு ஜன்னல் திறந்தது. ஒற்றைக்கண் சாட்டையடி வீரரும் மற்றவர்களும் ஒரேநேரத்தில்சுட்டார்கள். அந்தப்பிராந்தியம் குலுங்கியது!

பாய்ந்து பறந்து சென்ற குண்டுகள் அடிஆட்களை குறி தவறாமல் தாக்கி,வீழ்த்தின. பீதி அடைந்த மேயர், மிரண்டு ஓடிய குதிரையில் தப்பி ஓடினார்.


தப்பிவிட்டோம், இனி ஆபத்து இல்லை என்று அவர் நினைக்கையில்…
டென்வர்!

மேயர் துப்பாக்கியை தூக்குவதை டென்வர் பார்த்தான். அவனது இடது கை வேலை செய்தது!
அவன் இன்னும் கொஞ்சம் நெருங்கி வரட்டும்!
டென்வர் குறி பார்த்தபடி நின்றுகொண்டான். ஆனால் மேயர் குதிரையில் சுட்டுக்கொண்டே நெருங்கிவந்தார். ஒரு குண்டு டென்வர் தொப்பியை உரசிச்சென்றது.

டென்வர் 2 தடவை சுட்டான். முதல் குண்டு தவறியது. அடுத்தது மேயர் தலையை தாக்கியது. அவர் சாய்ந்தார். குதிரை இழுத்துச்சென்றது.
ஆ! அம்மா!
மேயர் உருண்டு மண்எண்ணை குட்டையில் பிணமாகசாய்ந்தார் அப்போது மற்றவர்களும் வர—
எண்ணை ஊற்றை கைப்பற்ற ஆராஜகத்தில் ஈடுபட்டார். அதே குட்டையில் அவர் செத்து விழுந்தது பொறுத்தமா இருக்கு.
மண்எண்ணெய் ஊற்றுக்காக ராலியின் நிலத்தை மேயர் கைப்பற்ற போட்ட திட்டத்தை டென்வர் விளக்கினான். பிறகு—
இனி நான் துப்பாக்கியை தூக்க மாட்டேன். இந்த குட்டையில் அதை வீசுகிறேன்!

துப்பாக்கி துஷ்டனின் வாழ்வில் ஒரு கறுப்பு அத்துடன் முடிந்தது. அவன் குதிரையில் ஏறி நகர் நோக்கி புறப்பட்டான்.
பிலிப், சைமன் மூவரும் ஷெரீப்பை சந்தித்து மேயர் பற்றியும், ராலி பற்றியும் விவரித்து கூறினார்கள். அதற்கு மேயர்—
பிலிப், உங்கள் போன்ற நேர்மையாளர், வீரர்கள் த்தை காக்க தேவை. நீங்கள் மூவரும் எனக்கு உதவியாளரா இருங்க!
ஷெரீப், அது முடியாது! நாங்க ஒரு இடத்தில் இருக்க மாட்டோம். ஆனால் உங்களுக்கு உதவ பொருத்தமான ஒரு ஆள் இருக்கிறான்.

அப்போது அங்கே டென்வர் வந்தான். அவனைப்போல் துப்பாக்கியும் கையுமாக அலைந்த பலர், சட்டத்தின் காவலர்களாக மாறியதற்கு பல உதாரணங்கள் இருந்தன.
லியோ! என்தம்பியையா சொல்கிறீர்கள்!
ஆமா, ராலி! நட்சத்திர ,சின்னம் அணிந்து இனி அவன் சட்டத்தைக் காக்க பாடுபடுவான். அவன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கு!
ஷெரீப் சம்மதத்துடன், டென்வர் உதவி ஷெரீப் ஆனான். ராலி மனம் மகிழ்ந்தான்.
டென்வர் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் ஏற்பட்டு விட்டதையும், பிரிந்த சகோதரர்கள் ஒன்று சேர்ந்த மகிழ்ச்சியையும்; மேயர் மாதிரி சுயநலவாதிகள் ஒழிந்ததையும் நினைத்து மிக்க மகிழ்ச்சியுடன் பிலிப், லியோ,சைமன் மூவரும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.
முற்றும்

விதவை ராணி!

சித்ரா மணாளன்

6. ஆசான் யோசனை!

முன்கதைச் சுருக்கம்:—

காலம் கி. பி. 1530. பனாரஸ் அருகே கங்கை நதிக் கரையில் அமைந்து இருந்த சினார் கோட்டை, அதைச் சார்ந்த ஒயுடே ராஜ்ஜிய மன்னர் தாஜ் கான். அவரது பட்டத்து ராணி லதி மாலிக்கி. தாஜ் கானுக்கு வேறு 2 மனைவிகள் இருந்தனர். அவர்களில் ஒருத்தியின் மகன், லதி மாலிக்கியை கொல்ல முயலும்போது பிடிபடுகிறான். பிறகு அவன், தகப்பனார் தாஜ் கானை கொன்று விட்டு தப்பி ஓடுகிறான். அவன் தலையை வெட்டி வரும்படி ராணி உத்தரவிட, உபதளபதி தவ்லத் பின்தொடர்ந்து போய் அரச கட்டளையை நிறைவேற்றுகிறான். அவன் திரும்பி வரும்போது ஒரு அழகான இளம்பெண்ணை, அரண்மனைக்கு அழைத்து வருகிறான்! அவள் பெயர் கதீஜா!

அரண்மனை அஸ்ரத் உஸ்தான் (ஆசான்) இத்ரீஸ் சாஹப், ராணிக்கு குரான் பாட போதனை வழங்கி பல நாள் ஆகிவிட்டது. மன்னர் தாஜ் கான் இறந்ததில் இருந்து, மத போதனையை அவராகவே நிறுத்தி இருந்தார். காரணம், ராணிக்கு அடுத்து அடுத்து பல வேலைகள் வந்துகொண்டே இருந்தன! ராஜ்ய பாரத்தை சுமப்பது என்பது சாமான்யமான காரியமா, என்ன?

ஆசான் பல தடவை அந்தப்புரத்துக்கே வந்து இருக்கிறார். ராணியிடம் அரச காரியங்கள் பற்றி ஆலோசனை கூறியும் இருக்கிறார். ஆனால், மத போதனை வழங்கவில்லை.

அன்று ராணியே, ஆசானை வரும்படி அழைத்து இருந்தாள். ஒருவேளை மத போதனையை ராணி தொடர நினைத்து இருக்கலாம் என்று கருதி ஆசான் அரண்மனைக்குப் போனார்.

அந்தப்புரத்துக்கு நுழையும் வழியில் உள்ள திவானி—காஸ் மண்டபத்தில் அவர் அமர்ந்தார். அவர் வந்துவிட்டதை அறிவிக்க ஒரு பணிப்பெண் ராணியின் அறைக்குப் பறந்தாள்.

கடந்த சில நாட்களாகவே ஆசான் ஒரு விஷயத்தை ஆழ்ந்து சிந்தித்தவண்ணம் இருந்தார். அதை ராணியிடம் எப்படி நேருக்கு நேர் சொல்வது என்று அவர் தயங்கிக்கொண்டே இருந்தார்.

அந்த விஷயத்தை எவ்வளவு சீக்கிரம் ராணியிடம் சொல்ல முடியுமோ அவ்வளவுக்கு நல்லது என்று அந்த பெரியவரின் பழுத்த அரசியல் அனுபவம் உணர்த்தியது. எனவே, எப்படியும் அதுபற்றி அரசியாரிடம் பேசிவிடுவதே நல்லது என்று அவர் முடிவு செய்தார்.

உடனே அவர் எழுந்துகொண்டு, விசாலமான திவானி—காஸ் மண்டபத்தின் சலவைக் கல் தரையில், அங்கும் இங்கும் நடந்தபடியே சிந்தித்தார்.

இந்த விஷயத்தை ராணியாரிடம் பேசினால், அவர் தன்னை தவறாக

புரிந்துகொண்டு தன் மீது கோபம் கொள்ளக் கூடாதே என்ற எண்ணம் அவர் மனதில் அவ்வப்போது எழுந்ததே, அவர் அதுபற்றி ராணியிடம் இதுவரை பேசாமல் இருந்ததற்கு காரணம்.

இந்த அரண்மனையில் அதுபற்றி பேச தன்னைவிட பொருத்தமான ஆள் வேறு யார் இருக்கிறார்கள் என்ற எண்ணமே, கடைசியில் அந்த விஷயத்தை அவர் ராணியாரிடம் பேசிவிடும் முடிவுக்குத் தள்ளியது.

அந்த விஷயம் பற்றி பவ்யமாக ராணியிடம் எப்படி பேச்சுக் கொடுப்பது என்பதை அவர் நடந்தபடியே யோசித்தார்.

அப்படி அவர் நடந்துகொண்டு இருக்கும்போது, ராணி உள்ளே வந்துவிட, அதை தான் கவனிக்காவிட்டால், அது ராணியாருக்கு தாம் இழைக்கும் அவமானம் ஆகுமே என்பதை உணர்ந்த அந்த முதியவர், ராணி வருகிறாரா என்பதை அடிக்கடி பார்த்துக்கொண்டார்.

ராணி வந்து அமர்ந்தார். வழக்கம் போல் ஆசான் சலாம் கூறிவிட்டு, அவரும் ஒரு ஆசனத்தில் அமர்ந்தார்.

''ஆசான்! தங்களை ஏன் இங்கே வரச்சொன்னேன் தெரியுமா? ஊகித்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்!''

ராணி, இன்று கலகலப்பாகவும், சந்தோசமாகவும் காணப்பட்டாள். அதை நொடியில் புரிந்துகொண்ட ஆசான் மேலும் உற்சாகம் அடைந்தார்.

''இஸ்லாமிய மார்க்க கல்வியை தொடர முடிவு செய்து இருப்பாய்!''

''இல்லை!''

''மகளே! உன் அரசியல் வேகத்துக்கு இந்தக் கிழவனால் ஈடுகொடுக்க முடியாது! நீயே சொல்லிவிடு!''

''இந்தக் கிழவர்தான், ராணி லதி மாலிக்கியையும், இந்த ராஜ்ஜியத்தையும் ஆட்டிப் படைக்கிறார் என்று பலரும் பேசுவது உங்கள் காதில் விழவில்லையா?''

''ஏன் இல்லை! என்னிடமே பலர் நேரில் கூறி இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உனது அரசியல் ஞானம், மன தைரியம் இவை பற்றி சரியாக தெரியாதவர்கள். ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஸ்தாபிக்கக்கூடிய அரசியல், அறிவு, தந்திரம், துணிவு அத்தனையும் உன்னிடம் அடிமையாகிக் கிடக்கின்றனவே, மகளே!''

''ஆசான்! பல்வேறு வேலை காரணமாகவே மத போதனையை தொடர முடியவில்லை. அதற்கென்று தினமும் ஒருவேளை ஒதுக்கிய பின் உங்களிடம் சொல்கிறேன். இப்போது தங்களை அழைத்துவர காரணம், இளைய ராணிகள் இருவரையும், அவர்கள் குழந்தைகளோடு, நாடு கடத்த முடிவு செய்துவிட்டேன். அதுபற்றி தங்களின் கருத்து கேட்கவே உங்களை இங்கே வரச்சொன்னேன்!'' ராணி, இவ்வாறு கூறிவிட்டு, ஆசான் முகத்தைப் பார்த்தாள்.

ஆசான் வெண்தாடியை தடவியபடியே, ஒரு கணம் யோசித்தார். பிறகு, ''நீ எடுத்து இருக்கும் முடிவு சரியானது. அவர்களை இந்த அரண்மனையில் காவல் வைத்து இருப்பது, உனக்கு பெருமையைத் தராது. சக்திவாய்ந்த இளவரசனை தவ்லத் கொன்றுவிட்ட நிலையில், இளைய ராணிகள் இருவரும் பல் இல்லாத பாம்புகள். என்றாலும், அவர்களை இங்கே கொட்டடியில் அடைத்து வைத்து இருப்பது தேவை இல்லாத காரியம். எனவே, நாடு கடத்திவிடு!''

''ஆசான்! அவர்களை எங்கே அனுப்பலாம்?''

''தரையை நோக்கியபடி ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்ட ஆசான், தலையை உயர்த்தாமலேயே கூறினார்:- ''பீகாருக்கு அனுப்பலாம்.



ஆனால், அங்கே முகமது லோடியின் கை ஓங்கி இருக்கிறது. அவர் நமக்கு எதிரானவர். எனவே, உன் ஒரகத்திகளை அங்கே அனுப்பக்கூடாது. டெல்லி பாதுஷா ஹுமாயூனின் அந்தரங்க எண்ணம் என்ன என்று தெரியாமல், அவரது ஆட்சிக்கு உட்பட்ட இந்துஸ்தானத்தின் எந்தப் பகுதிக்கும், நம் எதிரிகளை அனுப்புவது புத்திசாலித்தனம் அல்ல. குஜராத்தை இந்து மன்னர் பகதூர்ஷா ஆட்சி செய்கிறார். படை பலமும் டெல்லி பாதுஷாவை எதிர்க்கும் ஆற்றலும் கொண்டவர். அங்கே அனுப்பலாம். ஆனால், குஜராத் நமது சினார் கோட்டையில் இருந்து வெகுதூரத்தில் இருக்கிறது. எனவே அருகில் உள்ள காலிங்கார் நாட்டுக்கு அனுப்பலாம். அதையும் இந்து ராஜாதான் ஆட்சி செய்கிறார். உனது இளைய ராணிகள் முஸ்லிம் மதத்தினராக இருக்கிறபடியால், மொகலாய முஸ்லிம்களோ, ஆப்கன் முஸ்லிம்களோ, ஆட்சி செய்யும் இடங்களுக்கு அவர்களை அனுப்பக்கூடாது. எனவே எல்லாவகையிலும் பொருத்தமான இடம் கலிங்கார் இந்து ராஜ்ஜியம்தான். அங்கே அனுப்பி வை!''

ஆசான் இப்படி ஆணித்தரமாக கூறிக்கொண்டு இருக்கையில், ஒரு பணிப்பெண் வந்து மண்டியிட்டு வணங்கி, ''படைத் தளபதி வந்துவிட்டார்!'' என்று கூறினாள்.

உடனே ராணி, ''ஆசான்! தாங்கள் வேறு ஏதாவது கூறவேண்டுமா?'' என்று கேட்டார்.

ஆசான் சொல்வதற்கு வாய் எடுத்தார். ஆனால் தயங்கினார்.

''ஆசான்! ஏதுவாகிலும் தயங்காமல் சொல்லுங்க!''

''மகளே! உன்னைப் பற்றித்தான் பேச நினைத்தேன்!''

''என்னைப் பற்றியா?''

''ஆமாம்! உனது மறுமணத்தைப் பற்றி!''

ஆசான் முகத்தை உற்று நோக்கிய லதிமாலிக்கி, ''ஆசான்! நான் உலக ஆடம்பரங்களை வெறுத்து, இறை வணக்கமாகிய இபாதத்தில் சூபியாகி, என்னை ஈடுபடுத்திக்கொள்ளவே விரும்புகிறேன்!''

''அரச பாரத்தை தாங்கி இருக்கும் உன்னால் அதை செய்யமுடியாது, மகளே! மறுமணம், உனக்கு அரச கட்டாயம். இஸ்லாம்ய மார்க்கத்தில் அதற்கு வழி இருக்கிறது. தவிர, அது ஒரு பாதுகாப்பு; ராஜ தந்திரம்!''

லதி சிந்தனையில் ஆழ்ந்தாள். பிறகு, ''ஆசான்! அப்படியே நான் மறுமணத்துக்கு சம்மதித்தாலும், என்னை யார் கட்டிக்கொள்வார்கள்?''

''நீ எதை மனதில் வைத்துக்கொண்டு இதைச் சொல்கிறாய், என்று எனக்குப் புரிகிறது மகளே! அந்தப் பிரச்சினையை நினைக்காதே!''

''சரி, ஆசான்! வாதத்துக்காக நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். இப்போது மீண்டும் கேட்கிறேன். என்னை யார் மறுமணம் செய்துகொள்வார்கள்?''

ஆசான் பதில் சொல்லவில்லை.

லதி மீண்டும் கேட்டாள், ''என்னை யார் திருமணம் செய்துகொள்வார்கள்? ஆசான்! இந்த ராஜ்ஜியத்தை விரிவாக்க வேண்டும். இந்துஸ்தானத்தில் மீண்டும் ஆப்கன் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கவேண்டும். அதற்கு நான் சக்கரவர்த்தினி ஆகவேண்டும். விசால இந்துஸ்தானம்தான், நான் செய்ய இருக்கும் மறுமணம்!''

''உன் அறிவுக்கும், ஆற்றலுக்கும் உன் ஆசை ஒன்றும் தவறானது அல்ல. ஆனால் உன் திட்டத்துக்கு, மறுமணம் ஒரு தடையாக இராது. சொல்லப் போனால் அது பக்கபலமாக அமையும்!''

''என், உள்ளக்கிடப்பை புரிந்துகொண்டு, எனக்கு பக்கபலமாக, வலது கையாக இருக்கக்கூடிய நல்ல ஆண்மகன் கிடைப்பாரா ஆசான்? அது நடக்குமா...? அதனால்தான்...''

ஆசான் குறுக்கிட்டார். ''உனக்கு சகலவகையிலும் பொருத்தமான ஆள் இருக்கிறான்!''

''யார் அது?'' என்பதுபோல் லதி, ஆசான் முகத்தை நோக்கினாள்.

''மகளே! நமது தவ்லத்தான், சகலவகையிலும் பொருத்தமானவன்.''

''ஆசான்!''

''ஆமா, மகளே! நான் தீரயோசித்துதான் இந்த முடிவுக்கு வந்தேன்!''

அதைக்கேட்டு ராணி லதி சிரித்தாள்.

பிறகு, கையைத் தட்டினாள். ஒரு பணிப்பெண் ஓடிவந்து, தரையில் முழங்காலிட்டு வணக்கம் செய்தாள்.

''அந்தப் பெண் கதீஜாவை வரச்சொல்!''

சற்றைக்கெல்லாம், அழகு தேவதையாய், அலங்கார புஷ்ப பல்லக்காய் கதீஜா வந்து, வணக்கம் செய்து நிமிர்ந்தாள்.

யார் இந்தப் பெண்? ராணி இவளை இப்போ இங்கே அழைக்க காரணம் என்ன? என்பது புரியாமல் பெரியவர் இத்ரீஸ் ஆசான் குழம்பினார்.

அந்த குழப்பம் தீர்க்க, ராணியின் முகத்தை பார்த்தார்.

''ஆசான்! பார்த்துக்கொள்ளுங்கள். இவள்தான் தவ்லத்தின் காதலி. உங்கள் வருங்கால மறுமகள்!''

ஆசான், இறுகிப்போய் காணப்பட்டார். அவரால் பேச முடியவில்லை!

(இந்தக் கதையின் தொடர்ச்சி, அடுத்த இதழில் வெளிவரும்.)

உங்கள் கருத்து!

ரகசிய மாநாடு (1)

ஜேம்ஸ்பாண்ட் துப்பறியும் ரகசிய மாநாடு (பாகம்-1) படு சூப்பர். கடைசிவரை விறுவிறுப்பு குறையவில்லை!

—பா. சவுரிராஜ்,
வடுகர்பேட்டை.

குவாந்த் கூட்டத்தினர் ஜேம்ஸ்பாண்டுக்கு மயக்க ஊசி போட்டும், அவர் தப்பிக்கும் விதம் என்னை பரவசப்படுத்தியது.

—ப. சுப்பிரமணி,
(சத்தியமூர்த்தி நகர்) சென்னை-39.

ஜேம்ஸ்பாண்ட் கதைகள் இரண்டு பாகமாக பிரசுரிக்கும் புதிய உத்தி பாராட்டதக்கது!

—தமிழ்செல்வி மின்சிவா,
நாகர்கோவில்.

இரண்டு பாகம் என்ன? இருபது பாகமாக வெளியிட்டாலும் விடாமல் வாங்கி படிப்போம்!

—சு. காளிதாசன்,
தூத்துக்குடி.

அடுத்தடுத்து நடக்கும் திகில் சம்பவங்கள், இறுதியில் என்ன ஆகுமோ என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது!

—எம். ரவீந்திரன்,
கச்ச நகரம்.

பளபளப்பான அட்டை; பரபரப்பான சித்திரங்கள்; சிந்திக்க வைக்கும் போதனை—இதுதான் ராணி காமிக்ஸ்!

—சு. குமாரவேல்,
கீழ்கோடப்பமந்து.

அரியட்னேயின் துணிவும், சாமர்த்தியமும் நெஞ்சில் நீங்காது இடம்பெற்றுவிட்டன!

—கே. குமுதவல்லி,
பெங்களூர்-3.

விதவை ராணி!

சித்ரா மணாளன் எழுதும் "விதவை ராணி" வரிக்கு வரி விறுவிறுப்பு. தவ்லத்தின் ஆண்மை, வீரம் இரண்டும் கண் முன் நிற்கின்றன!

—சி. எல். சரவணன்,
மதுரை-1.

ஒரு சரித்திரக் கதையை எப்படி திகில் கதையாகவும் எழுத முடியும் என்பதை சித்ரா மணாளன் நிரூபித்து வருகிறார்!

—எஸ். ஹம்ஸத் ரைஹானா,
காயாமொழி.

அன்னமயிட்ட இடத்தில் கன்னம் வைத்த இளவரசனுக்கு சரியான முடிவு!

—எஸ். எம். ஆஜிபாபா,
பள்ளப்பட்டி-5.

நாலாவது அத்தியாயம், தர்பார் காட்சியை வரிக்கு வரி கண் முன் காட்டியது. ராணி லதி மாலிக்கி—வாழ்க! வாழ்க!

—தாமரை மணாளன்,
கைக்கோளபாளையம்.

சித்ரா மணாளனின் கற்பனை திறத்துக்கும், வர்ணனை வளத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, "விதவை ராணி" தொடர்!

—எம். சுப்பிரமணியம்,
கைக்கோளபாளையம்.

"விதவை ராணி!"—ஒரு சரித்திர சாகசம்! வீரத்தின் விளை நிலம்! மறக்கமுடியாத பாத்திரங்கள்! மணக்கும் நடை!

—ஏ. சேக் அப்துல்காதர்,
பள்ளப்பட்டு.

பேய் கதை (அணைக்கட்டு கொலைகள்), கிரைம் கதை (தொடர் கொலை) இவற்றை மிஞ்சும் வகையில் உள்ளது, சித்ரா மணாளனின் "விதவை ராணி!"

—ஜே. அகஸ்டஸ் அலெக்சாண்டர்,
தினைபூரணி.

தொடர்கதைகளுக்கு வரையப்படும் படங்களும் அருமை!

—மு. சிந்தாமணி,
கோவை-3.

கருத்துப் போட்டி எண் 57 முடிவு!

''ரகசிய மாநாடு'' (முதல் பாகம்) சித்திரக் கதை கருத்துப் போட்டியில், ''இருதரப்பும் சேர்ந்து செயல்பட வேண்டும்!'' என்று அரியட்னே கூறுவது பற்றி கருத்து கேட்டு இருந்தோம்.

போட்டியில் கலந்து கொண்டவர்களில் பாராட்ட தக்க விதத்தில் கருத்துக்களை எழுதி இருந்தவர்கள் வருமாறு:-

வி. ராணி (மேட்டுப்பாளையம்), எஸ். சிவலிங்கம் (சிங்காரப்பேட்டை), பாக்கியம் (பேளுக்குறிச்சி), என். வி. ஜெயப்பிரகாஷ் பாபு (சாலிகிராமம், சென்னை-93), எம். ரவீந்திரன் (கச்ச நகரம்), என். சங்கரன் பி. ஏ. (சிங்காரபேட்டை), எம். ரவிச்சந்திரன் (நாமக்கல்-2), எம். ரவீந்திரன் (பரமத்தி), எம். ராஜேந்திரன் (பேரூர்) ஆகியோர் பாராட்டதக்க விதத்தில் கருத்துக்களை எழுதி இருந்தார்கள்.

மிகச் சிறந்த கருத்தை எழுதி, அதற்காக ரூ. 50 பரிசு பெறுபவர்:-
கி. சு. மணியன்,
250, சு. பா. சாலை,
சுப்பிரமணியபுரம் அஞ்சல்,
கோவை-641 040.

அவரது கருத்து வருமாறு:-
''நம் இருதரப்பும் சேர்ந்து செயல்பட வேண்டும்'' என்று அரியட்னே, ஜேம்சிடம் கேட்கிறாள். இதில் ஒரு பொது நன்மை புதைந்துள்ளதை நாம் மறுக்க இயலாது. காரணம், எந்த நாடும் ஒன்றை ஒன்று எதிரிகளாக தமக்குள் நினைக்கும்போதும் கூட, தத்தமது நாடுகளின் நலன் பாதுகாக்கும் அடிப்படையில்தான் செயல்படுகின்றன.

ஆனால், இந்த அடிப்படை எதுவும் இல்லாத மூன்றாம் சக்திக்கு, அழிவும் ஆதாயமும்தான், தாரக மந்திரம். இப்படிப்பட்ட பயங்கரவாதத்தை அழிவுக்கு கொண்டுவர, எந்த நாடுகளும், என்ன விலை வேண்டுமானாலும், கொடுக்கலாம். அதற்காக தமக்குள் இருக்கும் முரண்பாடுகளை மூட்டை கட்டி ஒதுக்கி வைத்து ஒரு அணியில் நிற்கும்போதுதான் சதிகள் முறியடிக்கப்படும்! ஏன் சர்வதேச நெருக்கடிகளும் குறையும்!

எதிரும் புதிருமான இரு ஏஜெண்டுகள் மேஜர் கார்டியனின் கொலைக்குப் பின்னால், இருதரப்பும் சேர்ந்து செயல்பட வேண்டுமென, அரியட்னே ஜேம்சிடம் கூறுகிறாள். இது இரண்டு நாடுகளின் எண்ணங்களின் பிரதிபலிப்புதான். இது இந்த கதையின் திருப்பமான ஒரு நல்ல கட்டம்.
சமத்துவத்தையும், சமாதானத்தையும் யாரும் நேசிக்க மறுப்பதில்லை என்பதும் அரியட்னேயின் வார்த்தையில் அடங்கியிருப்பது நல்ல அம்சம்.''
இவ்வாறு கி. சு மணியன் கூறி உள்ளார்.

ரூ. 50/- பரிசு: கருத்துப் போட்டி-59

"சட்டவிரோதி" சித்திரக் கதையை படித்து விட்டீர்கள் அல்லவா? இனி இந்தக் கதையில், உங்களுக்கு பிடித்தமான கட்டம் எது? அதற்கான காரணம் என்ன? என்பது பற்றி உங்கள் கருத்தை, "ராணி காமிக்ஸ்", ஒரு பக்க அளவுக்கு மிகாமல், எழுதி அனுப்புங்கள்.

மிகச் சிறந்த கருத்துக்கு ரூ. 50 பரிசு வழங்கப்படும்.

தேர்ந்து எடுக்கப்பட்ட கருத்து 1-5-87 இதழில் பிரசுரிக்கப்படும்.

கருத்து போட்டி நிபந்தனைகள்:—

(1) கருத்துக்கள் எங்களுக்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 10-4-87.

(2) போட்டியில் கலந்து கொள்ள வயது வரம்பு கிடையாது.

(3) போட்டியில், ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது.

(4) கீழே உள்ள பாரத்தை பூர்த்தி செய்து, "கருத்து"டன் சேர்த்து அனுப்ப வேண்டும். அது இல்லாமல் வரும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

முகவரி:—
கருத்துப்போட்டி,
"ராணிகாமிக்ஸ்"
1091, பெரியார்
நெடுஞ்சாலை,
சென்னை-600 007.

கருத்துப் போட்டி எண்: 59

பெயர்:..

முகவரி: ....

....

....

....

போட்டி நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன்.

....

(கையொப்பம்)

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியர் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: எஸ். ராமஜெயம் பி.ஏ., 1091, பெரியர் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

ராணி காமிக்ஸ்

அடுத்த இதழில்..!

(தமிழ் புத்தாண்டு மலர்)

முக மூடி வீரர் பில்லி
அறிமுகம் ஆகும்

மர்ம வீரன்!

இன்ஸ்பெக்டர் ஆசாத் அசத்தும்

போலீஸ் பாதுகாப்பு!

2. சித்திரக் கதைகள்

சித்ரா மணாளன் எழுதும்

விதவை ராணி!

சரித்திர தொடர்.

ரூ 1,000 பரிசு:
கட்டுரைப் போட்டி!

ராணி காமிக்ஸ்

15.4.87-ல் வெளி வருகிறது!

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

15 சக்தி வாய்ந்த மூலிகைகள்.
பரவசமூட்டும் தேங்காய் எண்ணெயின் நுரைவளம்.
பாவையர் மனங்கவரும் தாழம்பு நறுமணம்.

மெடிமிக்ஸ்
ஆயுர்வேத டாய்லெட் சோப்பு

CHOLAYIL PHARMACEUTICALS, MADRAS

ZEST/MS/1